# விரைவுக் குறியீட்டு வினாக்கள்

## செய்யுள் : 1. அறிவியல் ஆத்திசூடி

1. 'நெல்லை' என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஊர் -

   அ) நெல்லூர் ஆ) நெல்லிக்குப்பம் **இ) திருநெல்வேலி** ஈ) நெய்வேலி

2. தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் மற்றும் கவிஞர் யார்?

   அ)  **ஆ)**  இ)  ஈ) 

3. "அறிவியல் சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்" இத்தொடருடன் தொடர்பற்ற வினா எது?

   **அ) எந்தவிதமான சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்?**

   ஆ) யார் சிந்தனைகளை வளர்க்க வேண்டும்?

   இ) எப்படி சிந்தனைகளை வளர்க்க வேண்டும்?

   ஈ) ஏன் சிந்தனைகளை வளர்க்க வேண்டும்?

4. என்றும் அறிவியலே வெல்லும் ஏன் என்று கேள் இச்செய்யுள் அடியில் வினாப்பொருளைக் குறிக்கும் சொல் எது?

   அ) கேள் ஆ) என்று **இ) ஏன்** ஈ) என்றும்

5. அகவரிசைப்படுத்துக.

   **அ) அகல், ஆர்வம், ஊக்கம், ஒன்றுபடு** ஆ) ஒன்றுபடு, ஊக்கம், ஆர்வம், அகல்

   இ) ஆர்வம், அகல், ஒன்றுபடு, ஊக்கம் ஈ) ஊக்கம், ஒன்றுபடு, அகல், ஆர்வம்

6. அறிவியல் ஆத்திசூடியில் விடுபட்ட சொல்லைத் தேர்ந்தெடு 'உண்மை கண்டறி ____________ வெற்றி தரும்'.

   அ) தூற்று ஆ) உயர்வு **இ) ஊக்கம்** ஈ) பாராட்டு

7. 'ஈடுபாட்டுடன் அணுகு' என்ற வரியின் பொருள்

   அ) உற்சாகத்துடன் செயல்படு ஆ) விருப்பமின்றிச் செயல்படு

   **இ) ஆர்வத்துடன் செயல்படு** ஈ) ஆர்வமின்றிச் செயல்படு

8. சரியான தொடரைத் தேர்ந்தெடு

   அ) ஓய்வர உழை ஆ) ஒய்வுற உழை இ) ஓய்வர ஊழை **ஈ) ஓய்வற உழை**

9. எறும்பு, தேனீக்களுக்கு உதாரணமாகக் கூறப்படும் அறிவியல் ஆத்திசூடி

   அ) ஔடதமாம் அனுபவம் ஆ) ஆய்வில் மூழ்கு

   இ) என்றும் அறிவியலே வெல்லும் **ஈ) ஓய்வற உழை**

10. எதிர்ச்சொற்களை முறைப்படுத்தி எழுதுக.


| | | | |
|---|---|---|---|
| i) | ஒருமித்து | அ) | தெளிவு |
| ii) | ஐயம் | ஆ) | சோர்வு |
| iii) | அணுகு | இ) | விலகு |
| iv) | ஊக்கம் | ஈ) | வேறுபட்டு |

**விடைகள்**

**i) - ஈ) வேறுபட்டு**
**ii) - அ) தெளிவு**
**iii) - இ) விலகு**
**iv) - ஆ) சோர்வு**

# செய்யுள் : 2. அறிவியலால் ஆள்வோம்

1. இயற்கை இடர்பாடுகளை முன் கூட்டியே அறிவிப்பேன். நான் யார்?
   அ) ஏவுகணை ஆ) ரோபோ இ) எந்திர மனிதன் **ஈ) செயற்கைக்கோள்**
2. 'இயற்கை வளமும் புயலும் மழையும் எங்கே என்று உரைக்கின்றான். இதில் இடம்பெற்றுள்ள வினாச்சொல்...
   அ) எது ஆ) எங்கு **இ) எங்கே** ஈ) ஏன்
3. அகர வரிசைப்படுத்தப்பட்ட விடையைத் தேர்ந்தெடுக்க.
   அ) நுண்ணோக்கி, கோள், செவ்வாய், பூமி ஆ) கோள், நுண்ணோக்கி, பூமி, செவ்வாய்
   **இ) கோள், செவ்வாய், நுண்ணோக்கி, பூமி** ஈ) பூமி, செவ்வாய், நுண்ணோக்கி, கோள்
4. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.
   அ) உடலும் உயிரும் **ஆ) வேளை தோறும்**
   இ) எலும்பும் தசையும் ஈ) புயலும் மழையும்
5. எங்கே + என்று என்ற சொல்லைச் சேர்த்து எழுதக்கிடைப்பது_________.
   அ) எங்கேஎன்று ஆ) எங்கேயன்று இ) எங்கென்று **ஈ) எங்கேயென்று**
6. கோடிட்ட இடங்களில் செய்யுள் அடிகளின் உரிய சொல்லை நிரப்புக. உறுப்பை __________ மருத்துவம் ______.
   அ) மற்றும், கண்டு ஆ) மாற்றம், கண்டு இ) மாற்றும், கொண்டு **ஈ) மாற்றும், கண்டு**
7. சரியற்ற இணையைக் கண்டறி
   அ) ROBOT - எந்திரமனிதன் ஆ) INTERNET - இணையம்
   இ) LAPTOP - மடிக்கணினி **ஈ) TECHNOLOGY - தொழில்துறை**
8. ஒத்த ஓசையற்ற இணையைத் தேர்ந்தெடுக்க.
   **அ) கருத்து, பறந்து** ஆ) வாழ்த்திடுவான், அமைத்திடுவான்
   இ) காக்கின்றான், பார்க்கின்றான் ஈ) சந்திரன், இந்திரன்
9. பூகம்பம், இயற்கை இடர்ப்பாடுகளை முன்கூட்டியே அறிய உதவுவது...
   அ) தொலைக்காட்சி ஆ) ஏவுகணை **இ) செயற்கைக்கோள்** ஈ) தொலைபேசி
10. இணையவலையின் உதவியால் உலகத்தையே நம் உள்ளங்கையில் கொடுக்கின்றான். விடைகேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.
    **அ) எதன் உதவியால் உலகத்தையே உள்ளங்கையில் கொடுக்கின்றான்?**
    ஆ) இணையவலை எதற்குப் பயன்படுவதில்லை?
    இ) இணைய வலையில் உதவியால் எதைக் கொடுக்கின்றான்?
    ஈ) இணையவலை ஏன் பயன்படுகிறது?
11. இணையைக் கண்டறிக.

| | | | |
|---|---|---|---|
| i) |  | அ) | தொழில்நுட்பம் |
| ii) |  | ஆ) | இணையம் |
| iii) |  | இ) | மடிக்கணினி |
| iv) |  | ஈ) | எந்திர மனிதன் |

**விடைகள்**

i) - ஆ) இணையம்
ii) - இ) மடிக்கணினி
iii) - ஈ) எந்திரமனிதன்
iv) - அ) தொழில்நுட்பம்

# உரைநடை : கணியனின் நண்பன்

1. தமிழ்நாட்டைச் சேர்ந்த உலக சதுரங்க வெற்றியாளர் _______.

அ) ரோஹித் ஷர்மா **ஆ) விஸ்வநாதன் ஆனந்த்**

இ) சச்சின் டெண்டுல்கர் ஈ) தங்கமாரியப்பன்

2. தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) டீப்புளு ஆ) ரோபோ **இ) மீத்திறன் கணினி** ஈ) சென்சார்

3. நுண்ணறிவு என்ற சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது _____________.

அ) நுண் + அறிவு **ஆ) நுட்பம் + அறிவு**

இ) நுண்மை + அறிவு ஈ) நுண் + ணறிவு

4. ஐ.பி.எம் என்பதன் விரிவாக்கம் __________.

அ) இந்தியன் பிசினஸ் மேனேஜ்மென்ட் ஆ) இந்தியன் பாங்க் மேனேஜ்மென்ட்

இ) இந்தியன் பிரிக்ஸ் மேனேஜ்மெண்ட் **ஈ) இந்தியன் பிசினஸ் மெசின்ஸ்**

5. சொற்றொடராக்குக கணக்கு வழக்கு

அ) கணக்குவழக்கை கணிப்பொறி செய்யலாம்.

ஆ) கணக்குவழக்குகள் கணிப்பொறி செய்யலாம்.

இ) கணிப்பொறி கணக்குவழக்குகளை செய்யும்.

**ஈ) கணிப்பொறி கணக்குவழக்குகளை விரைவாகச் செய்யப்பயன்படுகிறது.**

6. மட்டு+அற்ற என்னும் சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _________.

அ) மட்டுற்ற **ஆ) மட்டற்ற** இ) மட்டு அற்ற ஈ) மட்டாற்ற

7. நான் யார்? கண்டுபிடி எனக்குத் தலை, கை, கால் உண்டு. உயிர் இல்லை. நான் யார்?

அ) எந்திரம் ஆ) மருத்துவக்கருவிகள்

**இ) எந்திர மனிதன்** ஈ) கணினி

8. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) வழக்கு - நடைமுறை ஆ) வியப்பு - ஆச்சரியம்

இ) கட்டளை - ஆணை **ஈ) நுண்ணுணர்வு - நுட்பமான அறிவு**

9. ‘புதுமை’ என்பதன் எதிர்ச் சொல் _______

அ) புதியது **ஆ) பழைமை** இ) அருமை ஈ) பழமை

10. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| i) | செக் நாடு | அ) | காரிகேஸ் புரோவ் |
| ii) | டீப்புளு | ஆ) | காரல் கபெக் |
| iii) | ரோபோ | இ) | ஐ.பி.எம் |
| iv) | சதுரங்க வெற்றியாளர் | ஈ) | அடிமை |

**விடைகள்**

**i) - ஆ) காரல் கபெக்**
**ii) - இ) ஐ.பி.எம்**
**iii) - ஈ) அடிமை**
**iv) - அ) காரிகேஸ் புரோவ்**

# விரிவானம் : ஒளிபிறந்தது

1. எடை குறைவான செயற்கைக்கால்கள் எந்த இழைகளால் உருவாக்கப்பட்டன?

   அ) சிலிகான் ஆ) டங்க்ஸ்டன் ***இ) கார்பன்*** ஈ) தாமிரம்

2. 'விளக்குகள் பல தந்த ஒளி' என்னும் நூலின் மூலம் அப்துல் கலாம் பெற்ற பண்புகள்________.

   அ) உழைப்பு, வீரம், கல்வி

   ***ஆ) அறிவு, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி***

   இ) தன்னம்பிக்கை, விடாமுயற்சி, உழைப்பு

   ஈ) கல்வி, வீரம், மகிழ்ச்சி

3. 'லிலியன் வாட்சன்' எழுதிய நூலைத் தேர்ந்தெடுக்க.

   ***அ) விளக்குகள் பல தந்த ஒளி*** ஆ) அக்னிச் சிறகுகள்

   இ) இருள் வரும் நேரம் ஈ) கண்டுணர்ந்த இந்தியா

4. பொருத்தமற்றதைத் தேர்ந்தெடுக்க.

   அ) கேள்வி கேட்கின்ற மனப்பான்மை - குழந்தைகள்

   ஆ) அறிவியல் ஆர்வம் - ஆசிரியர்

   இ) 525 கிலோ எடை - ஆளில்லா செயற்கைக்கோள்

   ***ஈ) அக்னி மற்றும் ப்ரித்வி - ஏவுதளம்***

5. சரியான தொடரைக் கண்டறிக.

   அ) தமிழில் மிகவும் பிடித்த அப்துல்கலாமுக்கு திருக்குறள்.

   ஆ) அப்துல்கலாமுக்கு மிகவும் பிடித்த தமிழில் நூல் திருக்குறள்.

   இ) மிகவும் பிடித்த திருக்குறள் தமிழில் அப்துல் கலாமுக்கு நூல்.

   ***ஈ) அப்துல்கலாமுக்குத் தமிழில் மிகவும் பிடித்த நூல் திருக்குறள்.***

6. அப்துல் கலாம் அவர்கள் வளரும் இந்தியாவிற்காக மாணவர்களின் பங்காகக் குறிப்பிடாதது

   அ) குறிக்கோளுக்கான அறிவையும் அனுபவத்தையும் சேகரித்துக்கொள்ளுங்கள்

   ஆ) உயர்ந்த குறிக்கோளை மனத்தில் கொள்ளுங்கள்.

   இ) கடின உழைப்பால் வெற்றியடையுங்கள்

   ***ஈ) கனவு காணாதீர்கள்.***

7. அப்துல்கலாமுக்கு அறிவியலில் ஆர்வம் தோன்றக் காரணமாக இருந்தவர் ___________.

   அ) சகோதரி ஆ) தாயார் இ) நண்பர் ***ஈ) ஆசிரியர்***

8. அப்துல் கலாம் கூறிய பொன்மொழியைத் தேர்ந்தெடுக்க.

அ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

ஆ) காலம் பொன் போன்றது.

இ) வருமுன் காப்பது சிறந்தது.

***ஈ) கனவு காணுங்கள், உன்னைக் தூங்கவிடாமல் செய்வது எதுவோ அதுவே (இலட்சிய) கனவு.***

9. சரியான வினாவைத் தேர்ந்தெடுக்க. ஆயிரம் ஆண்டுகள் புகழ்பெற்ற பல்கலைக்கழகம் நாளந்தா பல்கலைக்கழகம்.

***அ) நாளந்தா பல்கலைக்கழகம் எத்தனை ஆண்டுகள் புகழ்பெற்றது?***

ஆ) நாளாந்தா பல்கலைக்கழகம் புகழ்பெற்றது எவ்வளவு?

இ) நாளந்தா பல்கலைக்கழகம் எப்படி ஆண்டுகள் புகழ்பெற்றது?

ஈ) நாளந்தா பல்கலைக்கழகம் யார் புகழ்பெற்றது?

10. கலாம் அவர்கள் வாழ்வியல் வெற்றி பெறுவதற்கான வழிகளாகக் கூறுவதில் ‘வியர்வை! வியர்வை!’ என்பதன் பொருள் ____________.

அ) உடல் வியர்வை ஆ) உடற்பயிற்சி இ) கண்ணீர் ***ஈ) உழைப்பு***

11. நிகழ்வுகளை வரிசைப்படுத்துக.

1) பறவைகள் போல் வானில் பறக்கவேண்டும்.

2) 300 கிராமில் செயற்கைக்கால்கள்

3) அணு ஆயுதச் சோதனைகள்.

4) வலுவான கல்விமுறை

அ) 1, 3, 2, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 3, 2, 1 ***ஈ) 1, 2, 3, 4***

12. பாதுகாப்புக்கருவிகளில் பயன்படுத்தப்படும் இழையைத் தேர்ந்தெடுக்க.

அ) சிலிகான் ***ஆ) கார்பன்*** இ) டங்க்ஸ்டன் ஈ) தாமிரம்

13. அப்துல் கலாம் கூறாத பொன்மொழியைத் தேர்ந்தெடுக்க.

அ) நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் நமது இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

ஆ) அழகைப்பற்றி கனவு காணாதீர்கள். அது உங்கள் கடமையைப் பாழாக்கிவிடும். கடமையைப் பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்கையை அழகாக்கும்.

***இ) இந்த உலகம் பெரிய பயிற்சிக்கூடம். நம்மை வலுப்படுத்திக்கொள்வதற்கே நாம் இங்கு வந்திருக்கிறோம்.***

ஈ) நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை.

# கற்கண்டு : மொழிமுதல் இறுதிஎழுத்துகள்

1. சரியான சொல்லைத் தேர்ந்தெடு

   ***அ) நண்டு*** ஆ) வுயில் இ) ரத்தம் ஈ) லட்டு

2. 'ண்' எனும் எழுத்தில் முடியும் தவறான சொல்லைத் தேர்ந்தெடுக்க.




   அ) மண் ஆ) எண் இ) கண் ***ஈ) டண்***

3. சொல்லின் இடையில் மட்டும் வரும் எழுத்தின் வகையைத் தேர்ந்தெடுக்க.

   அ) உயிரெழுத்து ஆ) உயிர்மெய்யெழுத்து

   ***இ) ஆய்தம்*** ஈ) மெய்யெழுத்து

4. 'ஙனம்' என்னும் சொல்லில் மொழிக்கு முதலில் வரும் எழுத்து

   அ) ங் ***ஆ) ங*** இ) ன ஈ) ம்

5. மொழி முதல் எழுத்தாக வராத எழுத்து

   ***அ) ல*** ஆ) அ இ) கி ஈ) க

6. தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

   அ) மியுனிக் ஆ) ஹாங்காங் ***இ) பனங்கற்கண்டு*** ஈ) ஜாங்கிரி

7. கெண்டி, நெல்லி, வெற்றி, கண்ணெ இவற்றில் மொழி இறுதி எழுத்தாக வராத எழுத்து_______.

   ***அ) ணெ*** ஆ) றி இ) லி ஈ) டி

8. 'வுயிர்' பிழையற்ற சொல்லை எழுதுக_______.

   அ) ஊயிர் ***ஆ) உயிர்*** இ) உயிற் ஈ) உஇர்

9. 'ஆய்வில் மூழ்கு' என்னும் சொல்லின் இறுதியில் வரும் உயிர் மெய்யெழுத்து___________.

   அ) மூ ***ஆ) கு*** இ) ழ் ஈ) ஆ

10. க,ச,ட,த,ப,ற இதில் மொழிக்கு முதலில் வராத எழுத்துகள் ________.

    ***அ) ட, ற*** ஆ) ச, த இ) க, ச ஈ) த, ப

11. 'தமிழை என் __________ என்பேன். கோடிட்ட இடத்தில் இடம்பெறத்தக்க சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.

    அ) உயிற் ஆ) ஊயிர் ***இ) உயிர்*** ஈ) உஇர்

12. பின்வருவனவற்றுள் மொழி முதலில் வரும் மொழிபெயர்ப்புச் சொல் ________.

    அ) கடல் ஆ) அங்ஙனம் ***இ) டென்மார்க்*** ஈ) கிழக்கு